**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 6, Issue 1, May 2026** **E-ISSN: 2583-715X**

# The Social Status of Dancing Girls in the Novel *Manthahasini*

**A. Deepika,** Research Scholar of Tamil, Reg. No.: 20PHTMF008, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996**
**Dr. C. Priyadharshini**, Associate Professor and Head, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502**
**DOI: 10.5281/zenodo.21024724**

## Abstract

*Araathu's novel 'Mandahasini' is a postmodern feminist work structured around the lives of three dancers—Mandahasini, Sirisha, and Honika—who lived across different geographical and temporal spaces from historical times to the modern era. This article describes the oppressions, sexual exploitation, internal struggles, and their rebellious voice against them faced by these women as dancers in a male-centered social system. This perspective analyzes how the elements of traditional historical novels are deconstructed and satirized in the novel, and how the Shiva-Parvati mythology is linked with contemporary women's suffering. Finally, this article defines the social existence of women as a whole, which languish at the intermediate point between Sirisha's world of poverty and oppression and Honika's world of absolute freedom.*

**Keywords:** Postmodernism, Feminism, Dancing Girls, Devadasi, Restraint, Social Space.

## References

[1] Araathu. *Mandahasini*. Zero Degree Publishing, 2021. Chennai.
[2] Irasamanickanar, Ma. *Cholar Varalaru*. Poompuhar Pathippagam, 2010. Chennai-600001.
[3] Ramadass, Prakashdass. K., and Ra. Seethalakshmi. "Devadasigal– Oor Aaivupaarvai (A Research View on Devadasis)." *Journal of Tamil Peraivu*, vol. 11, no. 1, 2022, pp. 63–70. https://doi.org/10.22452/JTP.vol11no1.7.
[4] Jeevanantham, S. "Devadasi Muraiyum Avatril Kaanapadum Saathiya Utkoorugalum." *International Research Journal of Tamil*, vol. 3, no. 3, 2021, pp. 89-96. IOR Press, doi:10.34256/irjt21312.
[5] Sivakami, *Penniyamum Udalarasiyalum* ,Chennai , Kavya Pathippagam, 2014.
[6] Nesan, Pulendran. "Pin Navinathuva Meiyiyalum Sinthanaiyalargalum- Post Modern Philosophy and Philosophers." *Hanthanah Philosophy Circle Blogsite*, 2 Mar. 2023, hanthanaphilosophycircle.wordpress.com.
[7] Panchangam, Ka. *Penn-Mozhi-Punaivu: Penniya Katturaigal*. Kavya Pathippagam, 1999.
[8] Palsing, Ra. "Pennudal Arasiyalum Paaliyal Velippadum (Kavignar Sasikala Babu-vin Kavithaigalai Munvaithu)." *Boomi International Research Journal of Tamil*, vol. 1, no. 1, January - March 2025, pp. 12-19.ISSN-3139-1893.
[9] Marx, A. *Pinnavinathuvam Endral Enna?*. Vidiyal Pathippagam, 2000. Coimbatore, 641004.
[10] Vanamamalai, Na. *Thamizhar Panbadum Thathuvamum*. Alaigal Veliyeettagam, 2008.

**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 6, Issue 1, May 2026 E-ISSN: 2583-715X


# மந்தஹாசினி நாவலில் நடன மங்கையரின் சமூக இடம்

**ஆ. தீபிகா,** முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவுஎண்:20PHTMF008, தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ் நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996
**முனைவர் ச. பிரியதர்சினி,** இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ் நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502

**ஆய்வுச்சுருக்கம்**

*அராத்துவின் 'மந்தஹாசினி' நாவல், வரலாற்றுக் காலம் தொடங்கி நவீனக் காலம் வரை வெவ்வேறு புவியியல் மற்றும் காலப் பரப்புகளில் வாழ்ந்த மந்தஹாசினி, சிரிஷா, ஹோனிகா ஆகிய மூன்று நடன மங்கையரின் வாழ்வியலை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட ஒரு பின்நவீனத்துவப் பெண்ணியப் படைப்பாகும். இக்கட்டுரை, ஆண் மையச் சமூக அமைப்பில் நடனக் கலைஞர்களான இப்பெண்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகள், பாலியல் சுரண்டல்கள், அவர்களின் அகப் போராட்டங்கள் மற்றும் அதற்கு எதிரான அவர்களின் கலகக் குரல் ஆகியவற்றை விவரிக்கிறது. நாவலில் மரபார்ந்த வரலாற்று நாவல்களின் கூறுகள் எவ்வாறு கட்டுடைக்கப்பட்டு நையாண்டி செய்யப்படுகின்றன என்பதையும், சிவன்-பார்வதி புராணக்கதை எவ்வாறு சமகாலப் பெண் துயரத்தோடு இணைக்கப்படுகிறது என்பதையும் இவ்வாய்வு பகுப்பாய்வு செய்கிறது. வறுமையும் ஒடுக்குமுறையும் கொண்ட சிரிஷாவின் உலகிற்கும், சகல சுதந்திரமும் கொண்ட ஹோனிகாவின் உலகிற்கும் இடைப்பட்ட புள்ளியில் தவிக்கும் ஒட்டுமொத்தப் பெண்களின் சமூக இருப்பை இக்கட்டுரை வரையறுக்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** பின்நவீனத்துவம், பெண்ணியம், நடனமங்கையர், தேவதாசி, கட்டுடைப்பு, சமூக இடம்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியச் சூழலில் தனித்துவமான பகடி , நையாண்டி மற்றும் பெண்ணிய பாணியால் அறியப்படும் அராத்துவின் 'மந்தஹாசினி' நாவல், அவரது முந்தைய படைப்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய கதைப்பின்னலைக் கொண்டது. சுமார் 150 பக்கங்களில் தமிழகம், கோவா, இந்தியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா எனப் பரந்து விரிந்த புவியியல் தளங்களில் இக்கதை நிகழ்கிறது. மரபார்ந்த வரலாற்று நாவலின் வடிவத்தைக் கையாள்வது போலத் தொடங்கி, அதன் புனைவு நுட்பங்களை நையாண்டி செய்யும் பின்நவீனத்துவ பாணியை ஆசிரியர் இதில் கையாண்டுள்ளார். காலங்காலமாகப் போற்றப்படும் கலைகளின் பின்னணியில் இருக்கும் பெண் கலைஞர்களின் உண்மை நிலை மற்றும் சமூகம் அவர்களை எவ்வாறு நோக்குகிறது என்பதை புதினம் பதிவு செய்கிறது. காலங்கள் மாறினாலும் பெண்களின் மீதான ஒடுக்குமுறையின் வடிவம் மாறவில்லை என்பதை நாவலின் முதன்மைக் கதாபாத்திரங்களான மந்தஹாசினி, சிரிஷா, ஹோனிகா ஆகிய மூவரின் வழியே நாவல் எழுப்புகிறது. இவர்களின் சமூக இடத்தையும், அவர்களின் வழியே வெளிப்படும் பெண்ணிய உளவியலையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நாவலின் கட்டமைப்பு மற்றும் புராணப் பின்னணி**

மந்தஹாசினி நாவல் ஒரே நேர்க்கோட்டிலான கதைசொல்லல் முறையைக் கொண்டிருக்கவில்லை. மூன்று வெவ்வேறு காலகட்டங்களை இணைக்கும் புள்ளியாக

**Volume 6, Issue 1, May 2026** **E-ISSN: 2583-715X**

'நடனம்' மற்றும் 'பெண்ணின் துயரம்' அமைகிறது. கதையின் மையக்கருத்திற்கு மேலும் வலுசேர்க்கும் பொருட்டு, சிவன் - பார்வதி புராணக்கதை இடம்பெற்றுள்ளது.

அராத்துவின் அடையாளமான மரபுகளை உடைக்கும் நகைச்சுவையும் பகடியும் நாவல் முழுவதும் காணப்படுகிறது .

> **படைப்பு என்பது, தொடர்ச்சியான, நேர்கோடான, ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியல்ல. அது தாறுமாறானதும், திட்டவட்டமற்றதுமான நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஆகும். கலை, இலக்கிய கோட்பாடுகளினை கேள்விக்குள்ளாக்கி அவற்றின் போதாமையை வெளிக்காட்டி, படைப்புக்களின் மாற்று சிந்தனையை வாசகர்களிடமே விட்டுவிடுகிறது. (நேசன், புலேந்திரன், பக். 3)**

பிரெஞ்சு இலக்கியக் கோட்பாட்டாளர் ரோலண்ட் பார்த் (Roland Barthes) முன்வைக்கும் பின்நவீனத்துவக் கருத்துகளின் பின்னணியில், எழுத்தாளர் அராத்து அவர்களின் மந்தஹாசினி புதினத்தை ஒரு புதுமையான பின்நவீனத்துவப் பெண்ணியப் படைப்பாக உருவாக்கியிருக்கிறார்.

'செம்புலப் பெயல் நீரார்' சங்கப் பாடலுக்கு அளிக்கப்படும் நையாண்டி விளக்கம், 'துணுக்குறுதல், 'கச்சைப் புகினும் கள்ளு நன்று', மற்றும் 'சிவன் கழுத்தில் இருந்த பாம்புக்கு ஷிப்ட் முறையில் வேலை' போன்ற பிரயோகங்கள், மரபார்ந்த புனிதங்களை உடைத்து, தீவிரமான பொருண்மையைக் வாசகனுக்குச் சுவாரசியமாகக் கடத்தப் பயன்படும் பின்நவீனத்துவ உத்திகளாக மாறுகின்றன.

> **முன்னோடிப் பிரதிகளையும், தீவிரமான வரலாற்றுப் வடிவங்களையும் நகல் செய்வதும், அவற்றைப் பகடி அல்லது நையாண்டிக்கு உள்ளாக்குவதும் பின்நவீனத்துவத்தின் முதன்மையான வடிவ உத்திகளாகும். தீவிரமான ஒரு விஷயத்தை விளையாட்டுத் தனமாகவும், நகைச்சுவை உணர்வோடும் அணுகுவதன் மூலம், அதுவரை கட்டமைக்கப்பட்டிருந்த 'புனிதத் தன்மையை' அது வாசகனின் முன்னிலையில் சிதைத்து விடுகிறது. (பின்நவீனத்துவம் என்றால் என்ன?, பக்.132)**

மரபார்ந்த இலக்கிய உலகம் எப்போதுமே உயர்ந்தவை மற்றும் தாழ்ந்தவை அல்லது சாமானியமானவை என்று ஒரு பெரும் சுவரை எழுப்பி வைத்திருக்கிறது. சங்க இலக்கியமான 'செம்புலப் பெயல் நீரார்' பாடலோ அல்லது ஆன்மீகப் படிமங்களோ 'உயர் கலை'யின் உச்சமாகக் கருதப்படுபவை. 'சிவன் கழுத்து பாம்புக்கு ஷிப்ட் முறை' போன்ற அன்றாட, மிகச் சாதாரணமான பிரயோகங்களை உள்ளே கொண்டுவரும்போது, அந்த உயர்-தாழ் வகைப்பாடு சிதறடிக்கப்படுகிறது

**மூன்று காலகட்ட நடன மங்கையரின் சமூக இடம்**

**1) மந்தஹாசினி**

மந்தகாசினி, பேரரசின் அரசவை நடன நங்கையாகவும், நாட்டியக் கலையின் உன்னதக் கூறுகளைக் கற்றுத் தேர்ந்த பேரறிஞராகவும் திகழ்ந்தபோதிலும், அவளது கலை ஆளுமை அதிகாரத்தின் நிழலிலேயே முடங்கிக் கிடந்தது. மன்னரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, தன் விருப்பங்களுக்கு மாறாகத் தன்னை ஒடுக்கிக்கொள்ள வேண்டிய அவலச் சூழலே அவளுக்கு வாய்த்திருந்தது. அவளது ஒப்பற்ற கலை மீதும், அவளது உடல் மீதும் ஆளும் வர்க்கத்தின் அதிகாரம் வலுக்கட்டாயமாகச் செலுத்தப்பட்டதை இந்நாவலின் வழி நாம் அறிய முடிகிறது.

> **தமிழகக் கோயில்களிலும் அரசவைகளிலும் பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் ஆடல் மகளிர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் கலைகளில் சிறந்தோங்கி இருந்தாலும், சமூக அடுக்கில் அவர்களுக்கான இடம் எப்போதும் ஆதிக்க வர்க்க ஆண்களின் விருப்பங்களைச் சார்ந்தே இருந்தது. வரலாற்றுக் காவியங்கள் இவர்களைப் போகப் பொருளாக மட்டுமே சித்தரிப்பதில் ஆர்வம் காட்டினவே தவிர, அவர்களின் தனிப்பட்ட**

Volume 6, Issue 1, May 2026 E-ISSN: 2583-715X

> **உரிமைகளுக்கோ துயரங்களுக்கோ முக்கியத்துவம் தரவில்லை. (இராசமாணிக்கனார் ப. 245)**

அரசவை நடன மங்கை என்ற ஒரே காரணத்திற்காகவே, மந்தகாசினி பேரரசரின் போகப் பொருளாக, அவளது சம்மதமின்றி இழுத்துச் செல்லப்பட்டதும் இங்கு உற்று நோக்கத்தக்கது. வரலாற்று நெடுகிலும், கலை வளர்த்த நடன மங்கையர்கள் ஆட்சியாளர்களின் ஆதிக்கத்திற்குப் பலியாகி வந்ததும், 'தேவதாசிகள்' என்ற பெயரால் ஆளும் வர்க்கத்தினரால் தொடர்ந்து சுரண்டப்பட்டு வந்ததும் கசப்பான உண்மையாகும். சமூகத்தில் அவர்களுக்கான மதிப்பிற்குரிய இடமும், அரிய கலையும் எவ்வாறு திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டன என்பதையே 'மந்தகாசினி' என்னும் கதாபாத்திரம் நமக்கு உணர்த்துகிறது.

> **இன்று உலகளவில் பிரசித்திப்பெற்றிருக்கும் பரதநாட்டியமும், கர்நாடகச் சங்கீதமும் தேவதாசிகள் அளித்த பெருங்கொடை என்றால் மிகையாகாது. சமூகத்தில் மன்னர்களால் உயர்ந்தநிலை கோபுரவிளக்குகளாக இருந்த தேவதாசியார்கள் இடைப்பட்ட தமிழக வரலாற்றில் மதிப்புமிழந்து தாழ்ந்த போதிலும் தங்கள் கலைகளைப் போற்றி வளர்த்தனர். "சதிராட்டம்" என்றே பரதநாட்டியம் அக்காலத்தில் அழைக்கப்படிடிருக்கிறது. "தேவதாசியார்கச்சேரி" என்பது "தேவடியார்கச்சேரி" என்றும் மருவிவிட்டது. (இராமதாஸ், பிரகாஷ்தாஸ். கு., மற்றும் இரா. சீதாலட்சுமி, பக். 65)**

தமிழ்ச் சூழலில் பொதுவெளி சார்ந்த கலை நிகழ்த்துகைகளில் (நடனம், இசை) தேவதாசி மரபைச் சேர்ந்த பெண்களின் பங்களிப்பு வரலாற்று ரீதியாக முதன்மையானதாக இருந்துள்ளது. காலப்போக்கில் இம்முறை ஒழிக்கப்பட்ட போதிலும், கலைகளில் ஈடுபடும் பெண்களை மதிப்பிடும் சமூகத்தின் தார்மீகக் அளவுகோல்களில் எவ்வித முற்போக்கான மாற்றமும் நிகழவில்லை என்பதையே சமகாலப் போக்குகள் உணர்த்துகின்றன. கடந்த காலங்களில் தேவதாசி குலப் பெண்கள் அனைவரும் பாலியல் ரீதியாக எளிய நுகர்வுக்குரியவர்கள் என்பதாகக் கட்டமைக்கப்பட்ட பொதுப்புத்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். இருப்பினும், அதே பிற்போக்கான பார்வையின் நீட்சியாகவே இன்றைய சமூக மனநிலையும் இயங்குகிறது. தற்காலத்தில் சமூகத்தின் பல்வேறு படிநிலைகளிலிருந்து தங்களின் சுய விருப்பத்தின் அடிப்படையில் கலை வெளிப்பாட்டிற்காகப் பொதுவெளிக்கு வரும் சாதாரணப் பெண்களையும், இச்சமூகம் அதே 'தேவதாசி' என்ற ஒற்றை அடையாளத்திற்குள் சுருக்கியே மதிப்பிடுகிறது. இத்தகைய ஒடுக்குமுறைப் பார்வையின் விளைவாகவே, கலைத்துறை சார்ந்த பெண்கள் மீது சமூகம் ஓர் ஆதிக்க மனப்பான்மையுடன் அத்துமீறல்களை நிகழ்த்துவதோடு, அவர்களின் தனிமனித எல்லைகளைக் கடந்து கூடுதல் உரிமைகளைத் தன்வசப்படுத்திக் கொள்ள முயல்கிறது. இதனை வரலாற்று ரீதியாக ஆராயும் நா. வானமாமலை,

> **மன்னராட்சியின் கீழ் கலைகள் போற்றப்பட்டதாகக் கூறப்படும் புனைவுகளுக்குப் பின்னால் பாலியல் நுகர்வும் உடலதிகாரமும் நிலைநிறுத்தப்பட்ட பெரும் சுரண்டல் மறைந்துள்ளது. (தமிழர் பண்பாடும் தத்துவமும், பக். 114)**

என்கிறார். அரசவை நடன மங்கையர் அல்லது குறிப்பிட்ட சமூகப் பெண்கள் மிக உன்னதமான கலைஞர்களாகச் சித்தரிக்கப்பட்டாலும், அவர்களின் உடல் மீதான அதிகாரம் எப்போதும் ஆதிக்க வர்க்கத்திடமே இருந்துள்ளது.

வரலாற்றுக் காலத்தில் வாழும் மந்தஹாசினி, பேரரசர்கள் மற்றும் அதிகார வர்க்கத்துடன் பழகும் வாய்ப்பைப் பெற்றவள். எனினும், அவளது பார்வை ஆண்களின் உலகை மிகத் துல்லியமாக எடைபோடுகிறது. அமைச்சர்கள், போர்வீரர்கள், வியாபாரிகள், புலவர்கள், செல்வந்தர்கள் எனச் சமூகத்தின் உயர் அடுக்கில் இருக்கும் அனைத்து ஆண்களின் போதாமைகளையும், வக்கிரங்களையும் அவள் பின்வருமாறு தோலுரிக்கிறாள்:

Volume 6, Issue 1, May 2026 E-ISSN: 2583-715X

> **அமைச்சர் அதிகாரி வட்டத்தில் கொஞ்சம் புத்தி இருக்கிறது, ஆனால் உடற்பேணுதல் இல்லை. சினையாடு போல இருக்கிறார்கள்... போர்வீரர்கள்... மண்டையில் மருந்துக்குக் கூட அறிவோ விவேகமோ இல்லை... புலவர்களில் யாரேனும் தேறுவார்கள் என்று பார்த்தால், அவர்களிடம் ஆளுமை இல்லை, ஆண்மை இல்லை, வறுமை அவர்களைக் கூனி குறுக வைக்கிறது... பெரும் செல்வந்தர்களுக்கு மது மாது மாமிசம் இதைத்தவிர வேறொன்றும் தெரியாது. (மந்தஹாசினி, பக். 23)**

மந்தஹாசினியின் இந்த உரையாடல், ஒரு சாதாரண நடனப் பெண்ணின் பேச்சாக இல்லாமல், எல்லா காலச் சூழல்களுக்கும் பொருந்தக்கூடிய ஆதிக்க ஆண்மைக்கு எதிரான கூர்மையான பெண்ணிய உளவியல் விமர்சனமாக அமைகிறது. அமைச்சர்கள், போர்வீரர்கள் எனச் சமூகத்தின் உயர் அடுக்கில் இருக்கும் அனைத்து ஆண்களின் போதாமைகளையும் அவள் தோலுரிக்கிறாள்.

**2) சிரிஷா**

சிரிஷா, சமகால அடித்தட்டுக் குடும்பப் பின்னணியிலிருந்து நடனக் கலைஞர் ஆக வேண்டும் என்ற கனவோடு வரும் பெண். கலை உலகிலும் அதிகார மையங்களிலும் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் சுரண்டலின் குறியீடாக அவள் திகழ்கிறாள். அரசியல்வாதி ஒருவன் அவளது ஆடைகளைப் பறித்துக்கொண்டு இணங்க வைக்கும் உச்சக்கட்ட ஒடுக்குமுறைச் சூழலில், சிரிஷா காட்டும் எதிர்வினை மிக முக்கியமானது.

அவனை அறையில் பூட்டிவிட்டு, ஆடையின்றி வீதியில் நடந்து வரும் காட்சி மிகைப்புனைவாகத் தோன்றினாலும், படைப்பாளர் நவீன இலக்கியத்தில் பெண் உடலை ஒரு நுகர்வுப் பொருளாகப் பார்க்காமல், கலகத்தின் அடையாளமாக மாற்றிய தருணம் இது.

> **ஆண் மையச் சமூகம் பெண்ணின் உடலை எப்போதும் ஒரு நுகர்வுப் பொருளாகவோ பார்க்கப் பழகியிருக்கிறது. ஆனால், அதே உடலை ஒரு பெண் தன் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான கலகக் குறியீடாக மாற்றும்போது அது அவளை ஒடுக்க நினைத்த ஆதிக்க ஆண்மையின் முகமூடியைக் கிழித்தெறியும் ஒரு பெரும் அரசியல் ஆயுதம். (பெண்ணியமும் உடலரசியலும், ப. 45)**

இவ்வரசியலைத் தமிழ் பெண்ணியச் சூழலில் எழுத்தாளரும் சிந்தனையாளருமான ப. சிவகாமி அவர்கள் துல்லியமாக வரையறுத்துள்ளார். ஆண்மையச் சமூகம் காலம் காலமாகப் பெண்ணின் உடலுக்கு 'மானம்', 'கற்பு', 'வெட்கம்' போன்ற போலிப் புனிதங்களை ஏற்றி வைத்து, அதையே அவளை ஒடுக்குவதற்கான கருவியாகவும் பயன்படுத்தி வருகிறது. ஆடைகளைப் பறிப்பதன் மூலம் ஒரு பெண்ணின் 'மானத்தைப்' பறித்துவிட்டதாக ஆண் நினைக்கும் அந்த உச்சக்கட்ட வன்முறையல், சிரிஷா அதை அப்படியே தலைகீழாகத் திருப்புகிறாள். இங்கு நிர்வாணம் என்பது அவமானமல்ல; தன்னை ஒடுக்க நினைத்த அதிகாரத்தின் முகத்தில் அறையும் ஒரு கலக ஆயுதமாக கருத வேண்டும்.

**3) ஹோனிகா**

சிரிஷாவுக்கு முற்றிலும் நேர்மாறானவள் ஹோனிகா. சகல வசதிகளும், உலகளாவிய அங்கீகாரமும், எல்லையற்ற சுதந்திரமும் பெற்ற சர்வதேசக் கலைஞர். ஆனால், அத்தனை வாய்ப்புகளும் இருந்தும் அவள் காட்டும் 'மனத்தெளிவின்மை' மற்றும் எதிர்பாராத திருப்பம் ஒரு முக்கியமான சமூக உண்மையைப் பேசுகிறது.

> **உலகமயமாக்கலும் நவீனச் சூழலும் பெண்களுக்கு எல்லையற்ற சுதந்திரத்தையும் பொருளாதாரத் தற்சார்பையும் வழங்கியிருந்தாலும், பல தலைமுறைகளாகத் தொடரும் சமூகக் கட்டுப்பாடுகளின் உளவியல் எச்சங்கள் நவீனப் பெண்களின் அகவெளியில் கடுமையான தடுமாற்றங்களையும் அடையாளச் சிக்கல்களையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றன. (பால்சிங், ரா. பக். 15)**

**Volume 6, Issue 1, May 2026** **E-ISSN: 2583-715X**

பல நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்டு வந்த பெண்களின் மரபணுக்கள் , திடீரெனக் கிடைக்கும் எல்லையற்ற சுதந்திரத்தைக் கையாளத் தெரியாமல் தடுமாறும் மனநிலையை அராத்து ஹோனிகா வழியே பதிவு செய்கிறார். சமூகத் தடைகளைத் தாண்டிவிட்ட நவீனப் பெண்ணின் அகவெளியில் இருக்கும் குழப்பத்தை இப்பாதிரத்தின் மூலம் அறிய முடிகிறது.

**நடன மங்கையர் சமகாலச் சமூக இருப்பு**

நாவல் உணர்த்தும் மிக முக்கியமான தத்துவார்த்த உண்மை என்னவெனில், நாம் அனைவரும் சிரிஷாவின் வறுமை மற்றும் சுரண்டல் நிறைந்த உலகிற்கும், ஹோனிகாவின் எல்லையற்ற சுதந்திர உலகிற்கும் இடைப்பட்ட ஏதோ ஒரு புள்ளியில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பதாகும். சிவன் ஐயங்கார், அமைச்சர், பேரரசர் போன்ற கதாபாத்திரங்கள், மூடநம்பிக்கைகள் மற்றும் ஆதிக்க ஆண்மையின் குறியீடாக நின்று பெண் கலைஞர்களைத் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றனர். அதிகாரமும் பணமும் படைத்த ஆண்கள் தங்களின் பாலியல் மற்றும் நுகர்வுத் தேவைக்கான ஒரு போகப் பொருளாகவே நடனப் பெண்களை எப்போதும் சுருக்கி வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதே சமூகத்தில் பெண் நடன கலைஞர்களுக்கான இடமாக அறிய முடிகின்றது.

> **தமிழக வரலாற்றின் இடைக்காலம் தொட்டே தேவதாசிகளின் தோற்றம் குறித்த தரவுகள் ஆய்வாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றன. எந்தவொரு குறிப்பிட்ட மதத்தினையும் சார்ந்திராத சங்க இலக்கியங்களில் நடன மகளிர், விறலியர், கூத்தியர், அடிமைப்பெண்கள், கொண்டிமகளிர் மற்றும் பரத்தையர் குறித்த வரலாற்று சான்றுகள் காணக்கிடைக்கின்றன. கேரளாவினைப் பொறுத்தமட்டில் தேவதாசிகள், கூத்தியர் , குடிகாரி, மறம்பாவையார், தேவிடிச்சி, நங்கைமார் , முறைக்காரி, கூத்தச்சி, மற்றும் ஆட்டக்காரி என்று அழைக்கப்பட்டுவந்தனர். (ஜீவானந்தம், ச, பக். 89)**

தேவிடிச்சி (தேவ அடியாள் என்பது மருவி இன்று வசைச்சொல்லாக மாறிய வடிவம்), குடிகாரி போன்ற பிரயோகங்கள், காலப்போக்கில் நிலப்பிரபுத்துவ மற்றும் சாதிய அடுக்குமுறைகள் இக்கலைஞர்களை எவ்வாறு பாலியல் பண்டங்களாக மாற்றி, சமூக விளிம்பிற்குத் தள்ளின என்பதற்கான மொழிசார்ந்த சான்றுகள் ஆகும்.

நடனப் மங்கையர்களின் சமூக நிலையை தமிழில் பேசிய முதல் பின்நவீனத்துவ படைப்பாக மந்தஹாசினி திகழ்கிறது. சங்க இலக்கியத்தில் பரந்து விரிந்து கிடந்த பல்வேறு ஆடல், பாடல் மற்றும் சமூகக் குழுக்களைச் சேர்ந்த பெண்களின் நிலையை, பிற்கால இடைக்காலச் சமூகம் எவ்வாறு ஒரே நிறுவனமயமாக்கப்பட்ட 'தேவதாசி முறைக்குள்' ஒடுக்கிக் கொண்டுவந்தது என்பதைப் புரிந்துகொள்ள இக்கருத்து பெரிதும் உதவுகிறது.

கலை என்பது இங்கே பல நேரங்களில் பெண்களைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கான ஒரு கவர்ச்சியான முகமூடியாகவே ஆதிக்க வர்க்கத்தால் பயன்படுத்தப்படுகிறது. பல நூற்றாண்டுகளாகத் தங்களுக்கு முந்தைய தலைமுறைப் பெண்கள் அனுபவித்த ஒடுக்குமுறைகள், சுரண்டல்கள் மற்றும் பாலியல் வக்கிரங்களின் வடுக்கள், நவீனப் பெண்களின் மன ஆழத்தில் ஒரு தொடர் தழும்பாக நீடிக்கின்றன.இதனால், எல்லையற்ற வெளி உலகச் சுதந்திரம் இருந்தபோதிலும், தங்களை எப்படிச் சமூகத்தில் நிலைநிறுத்திக் கொள்வது என்ற 'மனத்தெளிவின்மையும்' அகக்குழப்பமும் அவர்களுக்குள் ஒரு உளவியல் போராட்டமாக எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

> **ஆண் மையச் சமூகம் கட்டமைத்துள்ள ஒழுக்கவியல் விதிகளும் அழகியல் கூறுகளும் பெண்ணை எப்போதும் ஒரு நுகர்வுப் பொருளாகவோ அல்லது அடிமைப்பட்ட உயிரியாகவோ வைத்திருக்கவே விரும்புகின்றன. இலக்கியப் பிரதிகளில் இத்தகைய ஒடுக்குமுறைகளைத் தாண்டி பெண் தன் சுய அடையாளத்தை நிலைநிறுத்த முனையும்போது, அவளுக்கு இரண்டு விதமான உலகங்கள் உருவாகின்றன. ஒன்று, வறுமையும் மரபார்ந்த சுரண்டல்களும் நிறைந்த அவல உலகம்; மற்றொன்று,**

**நவீனத்துவம் அளிக்கும் போலிச் சுதந்திரத்தின் வழியே உருவாகும் அகவயமான குழப்ப உலகம். பெண்ணியத் திறனாய்வு என்பது இந்த இரண்டு எல்லைகளுக்கு இடையே தவிக்கும் பெண்ணின் சமூக இருப்பை அவளது உளவியல் போராட்டங்களோடு இணைத்துப் பகுப்பாய்வதாகும். அப்போதுதான் ஒட்டுமொத்தப் பெண் சமூகத்தின் இருப்பு நிலையை நாம் முழுமையாக வரையறுக்க முடியும். ('பெண்ணிய இலக்கியத் திறனாய்வு, பக், 84)**

நாவலாசிரியர் அராத்து, சிரிஷா மற்றும் ஹோனிகா ஆகிய இரு துருவங்களின் வழி சமகாலப் பெண்ணின் இரு வேறு உலகங்களைக் காட்டுகிறார். இதனைப் பெண்ணியத் திறனாய்வாளர் க. பஞ்சாங்கம் அவர்களின் கோட்பாட்டோடு பொருத்திக் காண முடியும். அவர் குறிப்பிடுவது போல, 'வறுமையும் மரபார்ந்த சுரண்டல்களும் நிறைந்த அவல உலகிற்கும், நவீனத்துவம் அளிக்கும் சுதந்திரத்தின் வழியே உருவாகும் அகவயமான குழப்ப உலகிற்கும்' இடைப்பட்ட புள்ளியில்தான் ஒட்டுமொத்தப் பெண்களின் சமூக இருப்பு நகர்கிறது. நாவலில் வரும் 'சிவன் ஐயங்கார் அமைச்சர், அரசர், பேரரசர், மற்றும் புதினத்தில் இடம்பெறும் அனைத்து ஆண்களும் இந்த இடைப்பட்ட புள்ளியில் தவிக்கும் பெண்அமைச்சர் அரசர் பேரரசர் மற்றும் புதினத்தில் இடம்பெறும் அனைத்து ஆண்களும் அமைச்சர் அரசர் பேரரசர் மற்றும் புதினத்தில் இடம்பெறும் அனைத்து ஆண்களும் பெண்களைத் தொடர்ந்து அச்சுறுத்தும் ஆணாதிக்கக் கட்டமைப்பின் குறியீடுகளாகும்.

**முடிவுரை**

அராத்துவின் 'மந்தஹாசினி' நாவல் நடன மங்கையரின் வாழ்வியலை வெறும் கலை சார்ந்த அழகியலாகப் பார்க்காமல், அவர்களின் சமூக இடத்தை வர்க்க, பாலியல் சுரண்டல்களின் பின்னணியில் காட்சிபடுத்துகிறது. மரபுகளைக் கட்டுடைக்கும் நகைச்சுவை, பின்நவீனத்துவக் கதைசொல்லல், புராணங்களின் குறியீட்டுத் தன்மை ஆகியவற்றின் வழியாக, வரலாற்றுக் காலம் தொட்டு நவீனக் காலம் வரை பெண்களின் அவல நிலை தொடர்வதை நாவல் அழுத்தமாகப் பதிவு செய்கிறது. சமகாலப் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் வக்கிரங்களை எதிர்கொள்ளத் தேவையான உச்சகட்டக் கோபத்தையும், அதே சமயம் நவீனச் சூழல் தரும் சுதந்திரத்தைக் கையாள்வதில் உள்ள உளவியல் சிக்கல்களையும் ஏககாலத்தில் பேசும் ஒரு புதுமையான பெண்ணியப் படைப்பாக 'மந்தஹாசினி' விளங்குகிறது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

**குறிப்புகள்**

[1] அராத்து. *மந்தஹாசினி.* ஸீரோ டிகிரி பப்ளிஷிங், 2021. சென்னை.
[2] இராசமாணிக்கனார், மா. *சோழர் வரலாறு.* பூம்புகார் பதிப்பகம், 2010. சென்னை-600001.
[3] இராமதாஸ், பிரகாஷ்தாஸ். கு., மற்றும் இரா. சீதாலட்சுமி. "தேவதாசிகள்– ஓர் ஆய்வுப்பார்வை (A Research View on Devadasis)." *தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் (Journal of Tamil Peraivu)*, vol. 11, no. 1, 2022, pp. 63–70. https://doi.org/10.22452/JTP.vol11no1.7.
[4] ஜீவானந்தம், ச. "தேவதாசி முறையும் அவற்றில் காணப்படும் சாதிய உட்கூறுகளும்." *சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் (International Research Journal of Tamil)*, தொகுதி. 3, எண். 3, 2021, பக்கங்கள். 89-96. ஐ.ஓ.ஆர் பிரஸ் (IOR Press), doi:10.34256/irjt21312.
[5] சிவகாமி, *பெண்ணியமும் உடலரசியலும்* , காவ்யா பதிப்பகம், 2014), சென்னை .
[6] நேசன், புலேந்திரன். "பின் நவீனத்துவ மெய்யியலும் சிந்தனையாளர்களும்- Post Modern Philosophy and Philosophers." *ஹந்தானஃ பிலாசஃபி சர்க்கிள் பிளாக்ஸைட்*, 2 மார்ச். 2023, hanthanaphilosophycircle.wordpress.com.
[7] பஞ்சாங்கம், க. *பெண்-மொழி-புனைவு: பெண்ணியக் கட்டுரைகள்.* காவ்யா பதிப்பகம், 1999. சென்னை.

[8] பால்சிங், ரா. "பெண்ணுடல் அரசியலும் பாலியல் வெளிப்பாடும் (கவிஞர் சசிகலா பாபு-வின் கவிதைகளை முன்வைத்து)." *பூமி பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்*, மலர் 1, இதழ் 1, ஜனவரி - மார்ச் 2025, பக். 12-19. Boomi International Research Journal of Tamil.

[9] மார்க்ஸ், அ. *பின்நவீனத்துவம் என்றால் என்ன?*. விடியல் பதிப்பகம், 2000. கோயம்புத்தூர், 641004.

[10] வானமாமலை, நா. *தமிழர் பண்பாடும் தத்துவமும்*. அலைகள் வெளியீட்டகம், 2008. சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.